அ.வ எண்161/2020 ராமசாமி (வாசா1) தேதி:11.09.2023

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனதுதகப்பனார் இறந்தபோது அவரது இறப்பிற்கு நான் சென்று கலந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 2005 ம்வருடம் இறந்தார். 2012 ம் வருடம் எனது தாயார் இறந்தார். எனது தகப்பனார் இறந்தபிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை 15 ஆண்டுகள் நான் தாவாசொத்திற்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான். தாவாசொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம்இந்த வழக்கில் தாக்கல் ் செய்யப்பட்டது என்றுசொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்கள் நி.மசாஆ.1 மற்றும் நி.ம.சா.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடும்போது வடபாதி தரிசு நிலமாகவும், தென்பாதி விவசாயம் செய்யப்பட்ட நிலமாக இருந்தது என்றுசொன்னால் சரிதான். மேற்படி தாவாசொத்தின் தென்பாதி, நிலத்தில்தான் நெல்லிக்காய், கொய்யா, தென்னை, சப்போட்டா ஆகிய மரங்கள் இருக்கிறது என்றுசொன்னால் சரிதான். மேற்படி தென்னை மரங்கள் பார்க்கும்போது 15 வருட வயத்திற்கு மேற்பட்டதாக இருந்தது என்றுசொன்னால் 40 வருடம் வயது இருக்கும். மேற்படி தென்பாதியில்தான் கிணறு, 2 வீடுகள் அமைந்துள்ளது என்றுசொன்னால் சரிதான். எனது தகப்பனார் இறக்கும்போது நான் அவரோடு சுமுகுமான உறவில் இருந்தேன் என்றுசொன்னால் நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் வசித்து வந்தோம். எனது தகப்பனார் இறக்கும்வரை நான் எனது குடும்பம் மற்றும் எனது தகப்பனார் ஆகியோர் தாவாசொத்திலுள்ள தோட்டத்துவீட்டில்தான் வசித்து வந்தோம். நான் தோட்டத்துவீட்டில் வசித்து வந்ததாக காட்டக்கூடிய ஆவணங்கள் எவையும் இல்லை என்றுசொன்னால் சரிதான். ரேசன் கார்டு வழங்கப்பட்டது ஆனால் எனது அப்பா இறந்தபின்பு அது குலோஸ் ஆகிவிட்டது. எனது பெயரில் எனது குடும்பத்திற்கு தனி ரேசன் கார்டு சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் வாங்கினேன். எனது அம்மா இறக்கும்வரை மேற்படி தோட்டத்து வீட்டில்தான் வசித்து வந்தார் என்றால்சரிதான். வழக்கு தாக்கல்செய்வதற்கு 10 வருடங்களுக்கு முன்னர் நான்தோட்டத்து வீட்டில் இருந்து வெளியே வந்து தனியாக வசித்து வந்தேன். தோட்டத்துவீட்டில் இருந்து வெளியேறி கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனது மகனுக்கு 30 வயது

இருக்கும். எனது மகளுக்கு சுமார் 35 வயது இருக்கும். எனது மகள் மற்றும் மகன் படித்த பள்ளியின் பராமரித்து வரும் ஆவணங்களை பரிசீலித்தால் 10 அல்லது 15 வருடங்களுக்கு முன்னர் நாங்கள் எந்த முகவரியில் வசித்து வந்தோம் என்று தெரியவரும் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தபிறகும் தாவாசொத்திற்கு நான் தொடர்ந்து சென்று வந்துகொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிடும்போது கொய்யா, மற்றும் நெல்லிமரங்கள் சிலவருடங்களாக பலன் தந்துகொண்டுஇருக்கும் மரங்களாக இருந்தது என்றுசொன்னால் சரிதான். தாவா சொத்தில் 2 வீடுகள் உள்ளன. மேற்படி 2 வீடுகளும் எந்தஆண்டு கட்டப்பட்டது என்றுசொன்னால் அது எனது அப்பாகாலத்தில் கட்டப்பட்ட வீடுகள் ஆகும். 2 வீடுகளுமே எனது அப்பா காலத்தில்தான் கட்டப்பட்டது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் எனக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம்காட்டப்படும் வழக்குரையில் 2 வீடுகளின் கதவு எண் காட்டப்படவில்லை என்றால் சரிதான். ஒருவீட்டின் கதவு எண்.5/128 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்தில் ஒருவீடு இருப்பதாகவும், அதில் பிரிவின்றி பாதி எனக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அது பொது சொத்து என்பதால் அது காட்டப்படவில்லை. எனது தகப்பனார் இறந்தபிறகு எனது சகோதரர்கள் மற்றும் தாயார் ஆகியோரோடு எனக்கு சுமுகமான உறவுமுறை இருந்தது என்றால் பகை இல்லை. வா.சா.ஆ.4 ல் சொத்து விவரத்தில் ராமசாமி சொத்திற்கும் தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ராமசாமி என்பது 2 ராமசாமிகள் இருக்கிறார்கள். மேற்படி ராமசாமி சொத்திற்கு தெற்கு என்று சொல்லப்பட்ட ராமசாமி நான்தான் என்றுசொன்னால் சரிதான். தாவாசொத்தின் வடபாதி நிலம் 1993 வருடத்தில் இருந்து தரிசாகத்தான் இருக்கிறது என்றால் வழக்கு தாக்கல் செய்யும் வரை விவசாயம் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் தரிசாக கிடக்கிறது. தாவாசொத்தில் நெல்லிக்காய், சப்போட்டா, தென்னை போன்ற பணப்பயிர்கள் இருப்பதாக வழக்குரையில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். எனதுதகப்பனார் எனது மற்ற சகோதரர்களுக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் அதற்கு பிந்தைய ஆவணங்கள்

குறித்து நான் எந்த பரிகாரமும் வழக்கில் கோரவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தில் 1995 பிப்ரவரி மாதம் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு வடபாதி எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தென்பகுதியை தனது கையில் வைத்திருந்த எனது தகப்பனார் எனது சகோதரர்களுக்கும் எனது சகோதரிக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது சகோதரர்களோ, எனது சகோதரியோ கட்சியாகவோ, சாட்சியாகவோ கையெழுத்துபோடவில்லை என்றால் சரிதான். 1995ம் வருடம் வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு சொத்தின் வடபகுதி 6 ஏக்கர் 30 செண்ட் நான் வெளியூரில் வசித்த காரணத்தினால் தரிசாகவே இருந்து வருகிறது என்றுசொன்னால் சரியல். நான் ஓட்டுநராக நல்ல வருமானம் பெற்றுவந்த காரணத்தினால் நான் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை விவசாயம் செய்யாமல் தரிசாக விட்டுவைத்தேன் என்றுசொன்னால் சரியல்ல. தாவாசொத்தில் தென்பகுதியில் 6 ஏக்கர் 29–1/2 செண்ட்சொத்தில் 1,2 பிரதிவாதிகளும், அதற்கு முன்னர் எனது சகோதர்களும், பணப்பயிர்கள் பயிரிட்டு அனுபவம்செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 பட்டா பெயர்மாற்றம் உத்தரவு 2016ம் வருடம் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி தோட்டத்திலுள்ள வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு நான் கட்டுகுத்தகையாக விட்டுள்ளேன். அவ்வாறு 1,2 பிரதிவாதிகளுக்கு மேற்படி வீட்டை கட்டுகுத்தகையாக விட்டுள்ளேன் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ, அல்லது வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை சாட்சியத்திலும் நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால்சரியல்ல. அவ்வாறு கட்டுகுத்தகைக்கு நான் வீட்டை பிரதிவாதிக்கு கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 தீர்வை ரசீது எனது தகப்பனார் மற்றும் 2ம்பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 தீர்வை ரசீது தவிர வேறு எந்த ரசீதுகளும் என்கைவசம் கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. என்கைவசம் இருக்கிறது. மேற்படி கைவசம் உள்ளரசீதுகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 நிலதீர்வை ரசீதுகள் 2005 வருடத்திற்கு பிறகு வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவாசொத்தின் தென்பகுதியை 6 ஏக்கர் 29–1/2 செண்டை 1,2 பிரதிவாதிகள் எனது தகப்பனார் மற்றும்

எனது சகோதரர்களிடமிருந்து எனக்கு தெரிந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வற்புறுத்தலின்காரணமாகத்தான் 1995 ம்வருடம் பிப்ரவரி மாதம் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. தென்பகத்தில் உள்ள கிணற்றை சுமார் 8 லட்சம் செலவு செய்து ஆழப்படுத்தி 2 ம்பிரதிவாதி தண்ணீர்வசதி செய்து வந்துள்ளார் என்றுசொன்னால் கிணறு தோண்டியது நான்தான். 2 ம்பிரதிவாதி கிணறு தோன்றுவதற்கு எந்தகாலத்திலும் வரவில்லை. அவ்வாறு கிணற்றை ஆழப்படுத்தும்பணி நடந்துகொண்டிருக்கும்போதுதான் 2 ம்பிரதிவாதி கிணற்றில் தவறி விழுந்து அவரது ஒரு கால் முழுமையாக துண்டிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் 2 ம்பிரதிவாதி அவர் கிணற்றில் விழுந்து காலை முறித்துகொண்டதாக என்னிடம் சொன்னார். தாவாசொத்தின் தென்பாகம் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் அதில் 2 வதாக வீடுகட்டி 2 ம்பிரதிவாதி பெயரில் மின்சாரஇணைப்பு மற்றும் தீர்வை கட்டணம் அனுபவத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கான கட்டிடஅனுமதி 2 ம்பிரதிவாதி பெயரில் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் என்னுடைய பார்வையில்தான் நடந்தது என்றுசொன்னால் சரியல்ல. தற்போது பிரதிவாதிகளின் நிலத்தில் உள்ள பயிர்களின் வருமானத்தை கருத்தில்கொண்டு பாகப்பிரிவினை நடக்கவில்லை என்று வழக்காடுகிறேன் என்றுசொன்னால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் கிணறு தென்பாகத்தில் அமைவதால் 1,2 பிரதிவாதிகளுக்கு மட்டுமே கிணற்றில் உரிமை இருக்கிறது என்றால் சரியல்ல. தாவாசொத்தாக காட்டப்பட்டுள்ள 5/128 கதவு எண் வீட்டிலோ, அதன்அருகில் உள்ள கிணற்றிலோ, எனக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்குபாத்தியப்பட்ட வடபகுதி 6 ஏக்கர் 30 செண்ட் நிலத்தில் கிணறு இல்லாத காரணத்தினால் நான் தரிசாக மேற்படி சொத்தை வைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கில் நான்கோரியுள்ள பரிகாரங்கள் எவையும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,

கோவில்பட்டி